# தொழிற்சங்கமும் தார்மீகக் கடமைகளும்

**செ.சாந்தரூபன்**
*சிரேஷ்ட உதவி நூலகர், (தரம் 1)*
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்
*santharoobans@esn.ac.lk*

ஜனநாயக நாடொன்றில் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதில் எதிர்க்கட்சி ஒன்றின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஆளுங்கட்சி மக்களின் இறைமையைப் பாதிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது அதனைச் சுட்டிக்காட்டுவதும் அதற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் எதிர்க்கட்சியொன்றின் முக்கிய பங்காக இருக்கின்றது. மக்களின் இறைமையைப் பாதுகாக்கின்ற பலமான ஜனநாயகக் கட்டமைப்பொன்றைப் பேணுவதற்கு எவ்வாறு பலமான எதிர்க்கட்சி அவசியமோ அவ்வாறே நிறுவனமொன்றில் ஊழியர் உரிமையைப் பேணுவதற்கும் நிருவாகப் பிறழ்வுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் தொழிற்சங்கம் அவசியமாகும்.
தொழிற்சங்கமொன்றின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எமது நாட்டில் பல்வேறு சட்டங்கள் உள்ளன. ஆயினும் தொழிற்சங்கமொன்றின் பலம் அதன் உறுப்பினர்கள் தமது தார்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதில் தங்கியுள்ளது. இக்கட்டுரை தொழிற்சங்க உறுப்பினர்களின் முக்கிய சில தார்மீகக் கடமைகள் பற்றி நோக்குகின்றது.

## *1.* பச்சாதாபம் (Empathy)

தொழிற்சங்கமொன்றின் மீதான நம்பிக்கை அச்சங்கம் எவ்வகையில் உறுப்பினர்களின் உரிமைக்குக் குரல்கொடுக்கின்றது என்பதில் தங்கியுள்ளது. தொழிற்சங்கத்திற்கு உறுப்பினர்கள் இருவகையான பிரச்சினைகளைக் கொண்டுவரலாம். ஒன்று நிருவாகத்தால் அல்லது பிறரால் அனைத்து ஊழியர்களையும் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பொதுவான பிரச்சினைகள் தொடர்பானது. மற்றையது தனிநபர் பிரச்சினை. முன்னையதிற்குத் தீர்மானம் எடுப்பது பொதுவாக தொழிற்சங்கத்திற்கு சவாலாக இருப்பதில்லை. பின்னையதிற்குத் தீர்மானம் எடுப்பதும் அதனைத்

தீர்ப்பதும் பலநேரங்களில் தொழிற்சங்கத்திற்குச் சவாலாக அமைகின்றது. இதற்குப் பிரதான காரணம் உறுப்பினர்களிடையே பச்சாதாபம் இன்மையே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரச்சினையைக் கொண்டு வருகின்ற உறுப்பினரின் இடத்தில் இருந்து அவரது பாதிப்பை உணர நாம் எத்தனிக்கவேண்டும். இதை ஆங்கிலத்தில் *"Before you judge a man, walk a mile in his shoes"* எனக் குறிப்பிடுவர். இதன்போதுதான் அவரது பிரச்சினையின் ஆழத்தினையும் அதன் பாதிப்பினையும் நாம் உணரலாம். இதை விடுத்து **'எனக்கு வந்தால் இரத்தம் மற்றவனுக்கு வந்தால் தக்காளிச் சட்ணி'** என்றிருத்தல் பொருத்தமற்றது. தமக்குப் பிரச்சினை வரும்போது தொழிற்சங்கத்தை நாடி பிரச்சினையைத் தீர்த்து விட்டு மற்றையவருக்குப் பிரச்சினை வரும்போது தொழிற்சங்கத்தை எதிர்த்தும், அதிலிருந்து விலகியும் செல்வதை நமது சங்கத்தின் வரலாற்றில் நாம் காணலாம். இதற்குப் பிரதான காரணம் சுயநலமும் பச்சாதாபம் இன்மையுமேயாகும்.

## 2. ஒற்றுமை (Solidarity)

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு' என்னும் முதுமொழிக்கமைய ஒற்றுமையென்பது தொழிற்சங்கத்தின் முதுகெலும்பாகும். தொழிற்சங்கம் முடிவெடுக்கும் வேளையில் அனைத்து உறுப்பினர்களும் பங்குபற்றி தமது கருத்தைத் தெரிவித்து கருத்தைக் கருத்தால் மோதி முடிவெடுப்பதற்குப் பங்காற்ற வேண்டும். அவ்வாறு முடிவெடுத்த பின் அம்முடிவில் உறுதியுடன் இருத்தல் அனைத்து உறுப்பினர்களதும் தார்மீகக் கடமையாகும். தொழிற்சங்க முடிவுகள் எட்டப்பட்ட பின் 'அது நால்வர் கூடி எடுத்த முடிவு' என்று தொழிற்சங்கத்திற்கு வெளியில் விமர்சிப்பதும், தொழிற்சங்கத்திற்கெதிராகக் கிளம்புவோருக்கு ஆதராவளிப்பதும் பொருத்தமற்றது. தொழிற்சங்க முடிவில் திருப்தியின்மை என்றால் அதனை மீண்டும் தொழிற்சங்கத்தில் வாதிட சகல உறுப்பினருக்கும் உரிமையுண்டு என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும். பொதுவாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் போது தொழிற்சங்கத்தை ஒற்றுமையிழக்கச் செய்வதுதான் எந்த நிருவாகமும் செய்கின்ற முதல் சூழ்ச்சியாகும். அது கையெழுத்து வேண்டும் கடிதமாக இருக்கலாம் அல்லது கட்டளைகளாக இருக்கலாம். புத்திசாதுரியமாக இச்சூழ்ச்சிகளுக்கு ஆட்படாமல் இருப்பது தொழிற்சங்க உறுப்பினரது கடமையும் தார்மீகப் பொறுப்புமாகும்.

### *3. சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருத்தல் (Abiding by the law)*

*தொழிற்சங்கமென்பது சட்டத்திற்குக் கட்டுப்பட்ட ஒன்று. தொழிற்சங்கமெடுக்கின்ற முடிவுகள் சட்டத்திற்குட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். சட்டத்திற்குப் புறம்பான முறையில் சலுகைகள் பெற்றுக்கொள்வதற்குத் தான் தொழிற்சங்கங்கள் காணப்படுகின்றன என்னும் பிழையான புரிதல் இன்னமும் பலரிடம் உள்ளது. ஊழியர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் போது சட்டத்திற்குட்பட்ட உரிமைகளைத்தான் தொழிற்சங்கங்கள் எப்போதும் கோரி நிற்கவேண்டும். சட்டத்தினைப் பிழையான முறையில் அணுகி ஊழியர் உரிமையை நிருவாகம் பறிக்க முற்படும்போது தொழிற்சங்கம் சட்டரீதியாக அதனை சரியான முறையில் அணுகி உரிமையை வென்றெடுக்க வேண்டும். சட்டத்திற்குப் புறம்பான முறையில் சலுகை பெறுவதை தொழிற்சங்கம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.*

### *4. தொழிற்சங்கம் பற்றிய தெளிவுடன் இருத்தல்*
### **(Clarity about trade unionism)**

*உறுப்பினர்கள் அனைவருக்கும் தொழிற்சங்கம் பற்றிய சரியான புரிதல் அவசியம். குறிப்பாக தொழிற்சங்கத்தை வழிநடத்துவோருக்கு அது மிக மிக அவசியம். தொழிற்சங்கத்தினை வழிநடத்தும் பொறுப்பிலுள்ளோர் தொழிற்சங்கம் பற்றிய தெளிவும் அனுபவமும் கொண்டவர்களாயிருத்தல் சிறப்பானது. அதிகார விருப்பிலும் அவ்வதிகாரத்தால் விளையும் நன்மையின் விருப்பிலும் இருப்போரை முக்கிய பதவிகளில் அமர்த்துவது பொருத்தமற்றது. அவ்வாறனவர்கள் சங்கத்தை வழிநடத்தவேண்டியேற்படின் தொழிற்சங்கம் சமூகசேவை அமைப்பாக மாற்றப்பட்டு உரிமைகள் பணயம் வைக்கபட்டு உறுப்பினர்கள் நிர்க்கதியாக்கப்படுவர்.*

### *5. நிறுவன நலனில் அக்கறை கொண்டிருத்தல்*
### **(Concern for organizational well-being)**

*ஊழியர்களின் உரிமையே தொழிற்சங்கத்தின் பிரதானமாயினும் தொழிற்சங்கம் தன் நிறுவனத்தின் நலனிலும் அக்கறை செலுத்தவேண்டும். அதற்காக தொழிற்சங்கம் நிருவாகத்துடன் ஒரு சுமூக உறவினைப் பேணலாம். ஆனால் அவ்வுறவு ஒரு சமநிலைத் தன்மையுடையதாக இருக்கவேண்டும். எனினும் தொழிற்சங்கத்தினை நடாத்தும் சிலர் தமது சொந்த நலனின் பொருட்டு நிறுவன நலன் என்னும் போர்வையில் ஊழியர் உரிமையைக் காவு கொள்ளும் செயற்பாட்டிற்குத் துணை போகலாம். இவ்வாறான செயற்பாடுகள் பற்றி தொழிற்சங்க உறுப்பினர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். நிருவாகம் விடுகின்ற பிழைகளைச் சுட்டிக் காட்கின்ற போதும், உரிமைக்குக்*

குரல் கொடுக்கின்றபோதும் ஏனைய நிறுவன நலன்களுக்காகத் தொழிற்சங்கம் நிருவாகத்திற்கு ஒத்துழைக்கலாம்.

### 6. தொழிற்சங்க நிகழ்வுகளில், நடவடிக்கைகளில் பங்களித்தல் (Participation in trade union events and trade union actions)

தொழிற்சங்கமொன்றின் உறுப்பினர்கள் அச்சங்கத்திற்கு தமது சந்தாப்பணத்தினைச் செலுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அச்சங்கத்தின் கூட்டங்களுக்கும், தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் அச்சங்கம் ஏற்பாடு செய்கின்ற பிற நிகழ்வுகளுக்கும் பங்குபற்ற வேண்டியது தார்மீகக் கடமையாகும். தொழிற்சங்கத்தினை நடாத்திச் செல்லும் அலுவலர்கள் கூட்டங்கள் நடாத்தும் போது உறுப்பினர்களின் வருகைக்காகக் காத்துக் கிடக்கவேண்டியிருப்பதை நாம் பலமுறை காண்கின்றோம். உறுப்பினர்களது கருத்துக்கள் மாத்திரமல்லாது அவர்களது வருகையும் தொழிற்சங்கத்தை முன்கொண்டு செல்கின்ற அலுவலர்களுக்குத் தார்மீக ஆதரைவை நல்கும். மேலும் சிலர் உறுப்பினரின் வருகையின்மையைத் தமக்குச் சாதமாக்கி தாம் வேண்டிய முடிவை எடுக்கும் நிலையும் ஏற்படும். முக்கியமாகத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் பங்கேற்கவேண்டியது அனைவரது கடமையாகும். பல உறுப்பினர்கள் தொழிற்சங்க நடவடிக்கைக் காலத்தை விடுமுறை நாட்களாகக் கருதுவதையும் நாம் இன்றும் காணலாம். இவை தவிர்க்கப்படவேண்டியவை.

**முடிவுரை**

ஜனனாயக முறையில் உரிமைகளை வென்றெடுப்பதற்கு பலமான தொழிற்சங்கம் அவசியமாகும். ஆயினும் அத்தொழிற்சங்கத்தின் வெற்றி அதன் உறுப்பினர்களின் பலத்திலும் பலவீனத்திலுமே தங்கியிருக்கின்றது. இப்பலமென்பது உறுப்பினர்கள் தம் தார்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்து அமையும். தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவரும் தொழிற்சங்க வாதிகளே. ஒவ்வொரு தொழிற்சங்க வாதியும் தம் தம் கடமைகளை செவ்வனே நிறைவேற்றினால் தொழிற்சங்கம் பலம் வாய்ந்த அமைப்பாகத் திகழும், எமது உரிமையும் கௌரவமும் பாதுகாக்கப்படும்.

*****